பாலர் கல்வி

தொகுதி 28	சோபகிருதுஸூ சித்திரை - வைகாசிமீ 1963 மே	பகுதி 2

தென்னிந்தியா ஆசிரியர் சங்கம்

ஆண்டறிக்கை (சுருக்கம்)

ஆக்கம்: பன்னிரண்டு மாவட்ட ஆசிரியர் கழகங்களும் இச்சங்கத்துடன் இணைப்பு பெற்றுள்ளன. சென்னை மாநில கம்மர்ஸியல் ஆசிரியர் சங்கமும், சென்னை மாநிலத்தில் உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் கிளார்க்குகளின் சங்கமும் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர் சங்கம் புதிதாக நிறுவப் பெற வேண்டும்.

பொறுப்பாளர்: மதராஸில் 18-5-62 அன்று நிகழ்ந்த பொதுப்பேரவையில் பின்வருமாறு தேர்வு முடிவுற்றது:

தலைவர்: திரு A. K. சீதாராமன்

துணைத்தலைவர்: திரு. V. அந்தோணிசாமி, திரு. . ராஜா அய்யர்

செயலர்: திரு. T. S. ராஜகோபால்

துணைச்செயலர்: திரு. A. K. வேணுகோபால்

பொருளாளர்: திரு. L. மாரியப் பிரகாசம்

விழிப்புக் குழு: திரு. . S. அருள்சாமி (இயக்குநர்), திரு. K. கிருஷ்ண அய்யர், திரு. R. பெருமாள், திருமதி லில்லி தேவவரம், திரு. M. அருமைச் செல்வம்.

திருவாகக் குழு: இக்குழு பின்வருமாறு ஆறு முறை கூடியது.

1. மே 16, 1962—மதராஸில்
2. ஜூன் 30, 1962—மதராஸில்
3. செப். 8, 9, 1962—இராமநாதபுரத்தில்
4. நவ. 14, 1962—மதராஸில்
5. ஜன. 5, 1963—கோயமுத்தூரில்
6. மார்ச் 9, 1963—திருநெல்வேலியில்

இக்குழு ஆற்றிய பணி, சுருக்கமாக:

1. 1961-62 ஆண்டின் அறிக்கை ஏற்கப் பெற்றது
2. இயக்கக் குழு (Working Committee) தேர்வு
3. 32 ஆவது கல்வி வாரக் கொண்டாட்டம்
4. AIFEA க்கு பிரதி நிதிகள் தேர்வு
5. 53வது, இராச்சியக் கல்வி மாநாட்டிற்கு ஏற்பாடுகள் ஆய்ந்தது
6. மேற்படி மாநாட்டிற்கு வரும் தீர்மானங்களை ஆய்ந்தது.

இயக்கக் குழு: (Working Committee.)

இக்குழு 1962 ஜூன் 30 இல் மதராஸில் கூடியது; 1962-63 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டம் ஏற்கப் பெற்றது. திரு. C. ரங்கநாத அய்யங்கார் பத்திரிகை-செயலராகவும், திரு.

P. V. ராமஸ்வாமி பத்திரிகை துணைச் செயலராகவும். திரு. V. பூவராஹ மூர்த்தி அலுவலகச் செயலராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். 53-வது இராச்சியக் கல்வி மாநாட்டிற்குத் தலைவரின் தேர்வு பற்றிய வாக்குக் களைப் பரிசீலனை செய்ய இக்குழு 1963 பிப்ரவரி 3ஆந் தேதியன்று மதராஸில் சங்கத்தின் அலுவலகத் தில் கூடியது.

52ஆவது இராச்சியக் கல்வி மாநாடு

இது மதராஸில் 1962 ஆம் ஆண்டு மே மாதம் 17, 18, 19 ஆவது நாட்க ளில் நிகழ்ந்தது. உயர் திரு S. கோவிந்தராஜுலு, வெங்கடேச்வரா பல்கலைக் கழகத் துணை வேந்தர், தலைவராக இருந்து மாநாட்டை வெற்றியுற நிகழ்த்தியுதவினர். திரு மதி துர்காபாய் தேஷ்முக் மாநாட் டைத் துவக்கி வைத்தார்; திருமதி ருக்மணி தேவி, பொருட் காட்சியைத் திறந்து வைத்தார். வரவேற்புக் குழு வின் தலைவராக உயர் திரு. R. கிருஷ்ணமூர்த்தி, மாஜித் தலைவர், பச்சையப்பர் கல்லூரி, மாநாட்டைப் போற்றத் தகுந்த முறையிலே நடத் தித் தந்தார்.

சபேசன் நினைவு-சொற்பொழிவை நிகழ்த்தியவர் உயர் திரு. P. துரைக் கண்ணு முதலியார் அவர்கள். துவக் கப் பள்ளி, ஆசிரியர் நலம், செகண் டரி கல்வி, கல்லூரிக் கல்வி, செய லற்றுர் கல்வி, பெண்டிர் கல்வி, தலை மையாசிரியர் குழு என்ற உட் பிரிவு கள் கூட்டங்கள் கூடி கல்வி சம்பந்த மாகத் தங்களது கருத்துக்களை வெளி யிட்டன. டாக்டர் C. D. தேஷ்முக், துணைவேந்தர், டில்லி பல்கலைக் கழகம், இம்மாநாட்டு மலரை வெளி யிட்டார்; முக்கியமான கூட்டங்களில் கலந்துகொண்டு தமது ஆலோசனை களைக் கூறியுதவினர்.

அனைத்து-இந்தியா 37-வது கல்வி மாநாடு :

இம்மாநாடு 1962-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் நாள் முதல் 31ஆம் நாள் வரையில் லக்னோவிற் கூடியது; ஸர்தார் ப்ரதாப்ஸிங்க கெய்ரானும் ஆசார்ய ஜுகாய் கிஷோரும் தலைவர் கள். மாண்பு மிக்க அனந்தசயனம் அய்யங்கார் மாநாட்டைத் துவக்கி வைத்தார். தென்னிந்தியா ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிகள் இம்மாநாட்டிற் குச் சென்றிருந்தார்கள்.

தென்னிந்தியக் கல்வி வாரம் 32-வது ஆண்டுக் கொண்டாட்டம்

இவ்வாண்டுக் கல்வி வாரம் 1962, அக்டோபர் 29-ஆம் நாள் முதல் நவம்பர் 4-ஆம் நாள் ஈறுகக் கொண் டாடப்பெற்றது, "கல்வியும் பயனுற வாழ்தலும்" என்ற விஷயம் இவ் வாரத்தில் விவரிக்கப் பெற்றது. உயர்திரு பஷீர் அகமத் ஸயத், கல்வி வாரக் குழுவின் தலைவராகப் பணி யாற்றினர். திருமதி நல்லமுத்து ராமமூர்த்தி கல்வி வார நிகழ்ச்சிகளைத் துவக்கி வைத்தார்.

ஆசிரியர் நாள் :

நமது ஜனதிபதி டாக்டர் S. ராதா கிருஷ்ணன் அவர்களது பிறந்த நாளை ஆசிரியர்களது நாளாக நாடெங்கும் கொண்டாடினேம். சென்னை ஆசிரியர் சங்கம், சென்னைத் தலைமை யாசிரியர் குழு இவற்றுடன் நமது சங்கம் ஒத் துழைத்து இந்த நன்னாளைக் கொண் டாடியது. திரு. K. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களும், திரு. T. புருஷோத்தம முதலியார் அவர்களும் சொற்பொழி வாற்றினர். கல்வித் துறை அதிகாரிகள் பேருக்கத்துடன் இக் கூட்டத்தை நன்கு நடத்த உதவி செய்தனர்.

மாவட்ட ஆசிரியர் கழகங்களின் ஒத்துழைப்பு :

இக் கழகங்கள் வழக்கம்போல் போற்றத்தகுந்த முறையிலே நம் சங் கத்துடன் ஒத்துழைத்து வருகின்றன. கல்வி முறை யமைப்பு, நாட்டு நெருக் கடியில் கல்வி, வீட்டு வாடகைப் படி, பென்ஷன் தொகை உயர்வு, ஆசிரி யர் சம்பளம், ஆசிரியர் ஓய்வு பெற

வேண்டிய வயதின் நீடிப்பு முதலியன பற்றி இக் கழகங்கள் தங்களது கருத்துக்களை வெளியிட்டிருப்பனவற்றை நம் சங்கம் கல்வி மந்திரி அவர்களிடமும் கல்வி இயக்குநர் அவர்களிடமும் எடுத்துக் கூறியிருக்கிறது. இவ்யாண்டில் இக் கழகங்களுக்கு நமது சங்கம் 5 அறிக்கைகள் அனுப்பியுள்ளது. துணைத் தலைவர் திரு V. அந்தோனிசாமி அவர்களது உழைப்பால் கன்னியா குமரி மாவட்டக் கழகம் நம் சங்கத்துடன் இணைப்புக்கு இசைந்துள்ளது. பாண்டி ஆசிரியர் சங்கமும் இணைப்பு வேண்டுகின்றது. தென்னார்காடு, சேலம், நீலகிரி இம்மாவட்டங்களில் ஆசிரியர் கழகங்கள் சீரமைப்புப் பெற ஏற்பாடுகள் நிகழ்ந்து வருகின்றன இச்சங்கப் பத்திரிக்கைகள் The South Indian Teacher பாலர் கல்வி இவை நன்கு இயங்கி வருகின்றன. பாலர் கல்வியின் சந்தாதார்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது; சந்தாவை ரூ 3 ஆக உயர்த்தி, பத்திரிகையின் தரத்தையும் உயர்த்தியிருக்கிறோம். இதனைக் காலத்தில் அச்சிட்டு வெளியிடுவதற்குச் சரியான அச்சகம் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. உரிய காலத்தில் மலர்களை வெளியிட ஏற்பாடு செய்து வருகிறோம். இப்பத்திரிகைகளைப் 'பிரசுரிப்பதற்கு உதவி வரும் திரு C. ரங்கநாத அய்யங்கார், திரு P. V. ராமஸ்வாமி, திரு G. ஸ்ரீநிவாஸாசாரியர், பத்திரிகைக் குழுவினர் இவர்களுக்கு நமது நன்றி உரித்தாகும்.

நிதிகள் :

(i) S. I. T. U. Benevolent Fund: ஆசிரியர் ஒவ்வொருவரும் ஆண்டிற்கு 25 ந. பை வீதம் அளித்துச் சேர்த்தது. இதில் ரூ. 3,500, நமது சங்கத்தின் பொன் விழாக் கட்டடத்திற்காகக் கடனாகக் கொடுக்கப் பெற்றுள்ளது.

(ii) S. I. T. U. Reserve Fund: இரண்டாண்டுகளுக்கு முன் ஆசிரியர் தலைக்கு ரூ. 1 வீதம் கொடுத்துச் சேர்க்கப்பெற்றது; நாளது தேதி வரையில் இவ்விவரத்தின்கீழ் இருப்பு ரூ. 507–65.

(iii) S. I. T. U. Defence Fund: இதைமுதலில் உயர்திரு S. நடராஜன் அவர்கள் ரூ. 40 அளித்துத் துவக்கி வைத்தார். இப்போதுள்ள தொகை ரூ. 139-00. வேலையினின்று நீக்கப் பெற்ற ஆசிரியர்க்கு உடனடியாக உதவ வேண்டுமென்ற நோக்கத்துடன் நிறுவப்பெற்றது.

(iv) S. I. T. U. Profession Trust Fund: இதில் ரூ. 3,286-12 நமது சங்கப் பொன்விழாக் கட்டிடத்திற்காகக் கடனாகக் கொடுக்கப் பெற்றுள்ளது; ரூ. 175 நமது சங்கத்திற்குக் கடனாகக் கொடுக்கப் பெற்றிருக்கிறது.

(v) Sabhesan Thanks-giving Fund: ரூ. 650 மதராஸ் ஆசிரியர் சங்கக் கூட்டுறவுச் சங்கத்தில் விடு முதல் செய்யப் பெற்றிருக்கிறது.

முக்கியமான நிகழ்ச்சிகள் :

1. முன்பு நம் சங்கத்தினருடன் ஒத்துழைத்து வந்த குமாரி K. N. ப்ராக்வே அவர்களுக்கு S. I. T. U. Council of Educational Research சுடன் சேர்த்து வரவேற்பு அளித்தது.

2. நியூயார்க் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த பேராசிரியர்களுக்கு வரவேற்பு அளித்தது.

3. ஆசிரியர் நாள் கொண்டாடியது.

4. அப்போதைக்கப்போது கல்வி மந்திரி, கல்வி இயக்குநர் இவர்களிடம் ஆசிரியர்களது குறைகளையும், விருப்பத்தையும் அறிவித்தது.

5. கல்வித் திட்டப் புனரமைப்பு பற்றிய ஆலோசனையில் கலந்தது.

செயலாளன் எழுதுங் கடிதங்கள் 11

செகண்டரிக் கல்வி யமைப்பு

1958-ஆம் ஆண்டுக் கல்வி திட்டத்தைத் திருத்தி யமைப்பதைப் பற்றிச் சட்டசபை உட்குழு நன்கு ஆராய்ந்து வெள்ளை யறிக்கை வெளியிட்டிருப்பதை யாவரும் அறிவர். கல்வியின் தரம் பொதுவாக ஓங்கவேண்டும் கணக்கு, விஞ்ஞானம்-இவை நல்ல முறையிலே கற்பிக்கப்பெற்று தரம் நன்கு உயரவேண்டும் என்ற நோக்கத்துடன் திட்டம் வகுக்கப்பெற்றுள்ளது, இந்த அறிக்கையில். இத்திட்டத்தில் காணக்கூடிய குறைபாடுகள் முக்கியமாக (1) சரிதம், பூகோளம், பரீட்சை தேறுவதற்கு இன்றியமையாததாகக்கருதப்பெறவில்லை, (2) மும்மொழிகள், ஆதாரப் பாடங்கள் மூன்று,விருப்பப்பாடங்கள்(electives) இவற்ருல் சுமை மாணவர்க்கு உயர்ந்துவிடும். இறுதி ஆண்டில் பரீட்சை எழுதும்போது மாணவர் ஆங்கிலத்தில் இரண்டு வினைத்தாள்கள், தாய்மொழியில் இரண்டு வினைத்தாள்கள், இந்தி அல்லது தொன்மொழியில் ஒன்று, ஆதாரப்பாடங்களில் மூன்று, விருப்பப் பாடங்களில் இரண்டு-ஆக 10 வினைத்தாள்கள் எழுதவேண்டும், இவ்வாறு சிறுவர்களுக்குச் சுமையை ஏற்றுவது சரியன்று என்பதை யாவரும் உணரலாகும். விருப்பப் பாடங்களைப் பற்றிச் சிறிது கருத்து வேற்றுமை கேள்வியுறுகிருேம். முதலாவதாக, விருப்பப் பாடமாகப்படிக்கும்போது கற்கவேண்டிய சுமை தாங்கமுடியா வண்ணம் பெருகிவிடும் என்பது சிலரது பயம். சில பாடங்களில் ஆற்றல் வாய்ந்தோருக்காகப் பாடத்தின் தரத்தை உயர்த்துவதுதான் ஏற்றதாகும், ஆனல் தாங்க முடியாத வகையில் ஏற்ருமல் காப்பது நமதுமுதற் கடமையாகும். இரண்டாவதாக, விஞ்ஞானத்தை விருப்பப் பாடமாகக் கற்பிப்பதற்குப் போதிய அளவில் உபகரணங்கள் பெரும்பான்மையான பள்ளிகளில் இல்லை, ஆதலால் இப்போது இதனை விருப்பப்பாடமாகத் திணித்தல் தகாது என்பர், சிலர். நாட்டின் வளம் பெருக, விஞ்ஞானத்தின் தரம் உயரவேண்டும். விஞ்ஞானத்தின் தரம் உயர, பள்ளிகளில் நன்கு கற்க வாய்ப்பு வேண்டும் என்பது எளிதில் உணரலாகும்; ஆதலால் இக் குறையை உடனடியாக நீக்கவேண்டியது பள்ளி நிர்வாகிகள், அரசியலார் இவர்களது கடமையாகும். நம் இராச்சியத்தில் கற்பிக்கும் கல்வியின் தரம், ஏனை இராச்சியங்களிலுள்ள தரத்திற்குச் சமமாக இருப்பது மிக அவசியம் ஆதலால் ஆதாரப் பாடங்களில் அவசியமான வகையில் மாத்திரம் கல்வி கற்பித்து, விருப்பப் பாடங்களிலும், ஆங்கிலம், தாய்மொழி இவற்றிலும் தரத்தைநன்கு உயர்த்தவேண்டும்.

இக்குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு, கல்வி திட்டத்தை 9, 10, 11வது வகுப்புக்களுக்குள்ளாகப் பின் வருமாறு அமைப்பது பயன்படுமென்று கூற விரும்புகின்ருேம்.

முதல் வகை: பிரிவு 1—ஆங்கிலம், தாய்மொழி, மூன்ருவது மொழி. பிரிவு 2. கணக்கு, விஞ்ஞானம், சரிதம் பூகோளம் ஆதாரப் பாடங்களாகவோ அல்லது விருப்பப் பாடங்களாகவோ எடுத்துக் கொள்ளலாம்; இம் மூன்றில் ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று விருப்பப் பாடங்களாகவும் விஞ்சியது ஆதாரப் பாடமாகவும் கற்கலாம். இந்த திட்டத்தால் ஏற்படும் அனுகூலங்கள் (1) சிறுவர்களுக்கு எல்லாப் பாடங்களும் கற்க வாய்ப்பு உண்டு, (2) சிறுவர்களது ஆற்றலுக்கேற்ப விருப்பப் பாடங்களில் அதிகம் கற்க வாய்ப்பு உள்ளது, (3) கணக்கு, விஞ்ஞானம் இவற்றின் தரம் உயர வாய்ப்பு உள்ளது, (4) பள்ளிகள், தங்களது

தேவைக்கு ஏற்ப பாடங்களைக் கற்பிக்கலாம்.

இரண்டாம் வகை: பிரிவு 1. ஆங்கிலம், தாய்மொழி, மூன்றுவது மொழி, பிரிவு 2. ஆதாரக் கணக்கு அல்லது தரம் உயர்ந்த கணக்கு, பிரிவு 3. விருப்பப் பாடங்கள் இரண்டு—ஒன்று விஞ்ஞானம் போன்ற பாடங்கள் கொண்ட பிரிவிலிருந்து, மற்றது சரிதம் போன்றவை (humanities) கொண்டபிரிவிலிருந்து. 1958–ஆம் ஆண்டு திட்டப்படியே கணக்கு இரண்டு தரங்களாக வகுக்கப் பெற்று விருப்பப் பாடத்தின் நிலையைப் பெற்றிருப்பது யாவரும் அறிந்ததே.

மூன்றும் வகை: பிரிவு 1. ஆங்கிலம், தாய்மொழி, மூன்றும் மொழி. பிரிவு 2. ஆதாரக் கணக்கு அல்லது தரம் உயர்ந்த கணக்கு. பிரிவு 3. விஞ்ஞானம் (விருப்பப் பாடம்) + சரிதம். பூகோளம் (விருப்பப் பாடம்) + விஞ்ஞானம் (ஆதார நிலை).

இம்மூன்று வகையிலும் Bifurcated Courseக்கு வாரம் 13 பிரியடுகள் பின்வருமாறு அளிக்கலாம்: ஆங்கிலம், தாய்மொழி இவற்றுள் 13 பிரியடு, உடற் பயிற்சி முதலியன 4, கணக்கு 5 இவைபோக மீதி 13 பிரியடுகள், மொழிகளில் கற்க வேண்டியதை இப்போதுள்ளது போல் நாலும் ஆறுமாகக் கூறுபோடுவது ஏற்றதன்று என்பது எமது அபிப்பிராயம்.

மெட்ரிக்முறை அளவுகள்

(Sri K. N. Jayaraman, B.A.. L.T.)

நீட்டல், நிறுத்தல், முகத்தல் என்ற அளவுகளில் நாம் பயன்படுத்தி வந்த அலகுகள், பலவாருக இருந்தன. அரசியலார் வகுத்துத்தந்த அளவுத் திட்டங்கள் பெறும்பாலும் பட்டணங்களில் மட்டுமே வெகுவாகப் பயன்பட்டு வந்தன. உள் நாட்டுப் பிரதேசங்களிலும், மற்றும் கிராமங்களிலும் ஆங்காங்கு அவரவர் பழமையாகக் கையாண்டு வந்துள்ள அளவுத் திட்டங்களைப் பின்பற்றியே கொடுக்கல் வாங்கல் செய்து வந்துள்ளனர். ஆகவே இவை இடத்துக்கு இடம், மாகாணத்துக்கு மாகாணம் வேறுபட்டிருந்தன. அங்குலம், கஜம் ......என்ற அளவுகளைக் கடந்த அரசாங்கத்தார் வகுத்திருந்தபோதிலும் முழம், சாண்......என்ற அளவுகள் பயன்படுத்தப் பட்டன. அது போலவே மற்ற அளவுத் திட்டங்களிலும் எண்ணற்ற வேறுபாடுகள் காணப்பட்டன. அரசாங்கம் வகுத்த அளவுகளும்கூட மிகமிகச் சிக்கலான வாய்பாடுகளைக் கொண்டிருந்தன. அந்தந்த வாய்பாடுகளை அடியில் எடுத்துக் காட்டுவோம்.

நீட்டல்: 12 அங்=1 அடி; 3 அடி =1 கஜம்; 22 கஜம்=1 சங்கிலி; 10 சங்கிலி=1 பர்.; 8 பர்=1 மைல்.

மேலின அலகுகளின் தொடர்பைக் காட்டும் எண்கள் 12, 3, 22, 10, 8 என்பவை.

நிறுத்தல்: 3 தோலா=1 பலம்; 8 பலம்=1 சேர்; 5 சேர்=1 வீசை, 8 வீ.=1 மணங்கு; 20 மண. =1 பாரம்.

தொடர்பை விளக்கும் எண்கள் இங்கு 3, 8, 5, 8, 20 என்பவை. அதுபோலவே முகத்தல் அளவுகளையும் குறிப்பிட்டுக் காட்டலாம். இத்தகைய சுயேச்சையான எண்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டன, எதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டன என்பது விளங்கவில்லை. சிறு பாலர்களைத் துன்புறுத்துவதற்கு போலும்! இத்தகைய வாய்பாட்டை நினைவில் பொருத்துவதுமின்றி, இப்பெயர்களையும்

கலக்கமின்றி மனதில் கொண்டு, மேலின அளவுகளைக் கீழின அலகுகளாகவோ, கீழின அளவுகளை மேலினங்களுக்கோ மாற்றுவது எவ்வளவு கடினமான செயல்! இத்தகைய இனம் மாற்றல்களைச் செய்ய மேற்கூறிய எண்களால் பெருக்கலோ, வகுத்தலோ படிப்படியாகச் செய்ய நேரிடும். இவ்வகைச் செயல்களைச் செய்யும்போது பழக்கப்பட்ட பெரியவர்களே பிழைகள் செய்ய நேரிடும் எனில், சிறுவர்களைப்பற்றிக் கூற வேண்டியதில்லை. வாய்ப்பாடுகளின் அறிவு குறைபாட்டினால் எத்தனை பாலர்கள் தேர்வுகளில் தவறியிருக்கின்றனர்.

இம்மாதிரியான குறைபாடுகள் எதுவும் இல்லாததும், எண்ணற்ற அனுகூலங்களைக் கொண்டதுமான மெட்ரிக் முறை அளவுகளைச் சிறிதுகாலமாக அரசாங்கத்தார் வற்புறுத்தி வருவது மிகவும் மெச்சத் தக்கதும், பெருமைப் படத்தக்கதும் ஆகும். இந்த அளவுகளை அமுலுக்குக் கொண்டு வருவதால் பிள்ளைகள் வாய்ப்பாடுகளை நினைவில்கொள்ளுவதோ, அவற்றில் இன மாற்றல்களைச் செய்வதோ, மிகமிக எளியதாகும். நீட்டல், நிறுத்தல், முகத்தல்...இவற்றின் பிரதான அலகின் பெயருடன் சிற்சில குறிப்பிட்ட முன்னிணைப்புப் பதங்களைச் சேர்ப்பது மேலின அலகுகளையும், கீழின அலகுகளையும் குறிக்கும். மூவகை அளவுகளிலும், இந்த முன்னிணைப்புப் பதங்கள் ஒரே மாதிரியானவை.

இந்த அளவுகளைச் சார்ந்த அலகுகளின் தொடர்புகள் எண்களின் தசம முறைக் குறியீட்டையே பின்பற்றியுள்ளன. அலகுகளின் பெயர்களின் விவரம் :

நீட்டல் (மீட்டர்)	நிறுத்தல் (கிராம்)	முகத்தல் (லிட்டர்)	
மிலி மீட்டர்	மிலி கிராம்	மிலி லிட்டர்	கீழின அலகுகள்
சென்டி ,,	சென்டி கிராம்	சென்டி ,,	
டெசி ,,	டெசி ,,	டெசி ,,	
மீட்டர்	கிராம்	லிட்டர்	அலகு
டெகா மீட்டர்	டெகா கிராம்	டெகா லிட்டர்	மேலின அலகுகள்
எக்டா ,,	எக்டா ,,	எக்டா ,,	
கிலோ ,,	கிலோ ,,	கிலோ ,,	

இந்த அளவுகளில் கீழினங்கள், மேலினங்கள் உள்ளன. நீட்டலளவைக்கு மீட்டரும், நிறுத்தலுக்கு கிராமும், கொள்ளளவுக்கு லிட்டரும் பிரதான அலகுகள் ஆகும். அந்தந்த அலகின் கீழினங்களைக் குறிக்க டெசி, சென்டி, மில்லி என்ற முன்னிணைப்பு பதங்களும், மேலினங்களைக் குறிக்க டெகா, எக்டா, கிலோ என்ற பதங்களும், பிரதான அலகின் பெயருடன் இணைக்கப்படுதல், அவற்றின் பெயர்களை ஞாபகத்தில் கொள்ள அனுகூலமாக இருக்கிறது. இத்தகைய அலகுகளின் பெரும் சிறப்பு யாதெனில் அலகுகளின்மேல் நோக்கும் தொடர்போ, கீழ்நோக்கும் தொடர்போ எண்களின் தசம முறைக் குறியீட்டைப் பின்பற்றியிருப்பதே ஆகும். ஒரெண்ணில் எந்த இடத்தைக் கருதிய போதிலும் அந்த இடத்தின் மதிப்பு அதன் வலப்பக்க இடமதிப்பைப்போல் பத்து மடங்கு கொண்டதாகும், அதன் இடப்பக்க இடமதிப்பில் பத்தில் ஒரு பாகமும் ஆகும். அது போலவே, இந்த

மெட்ரிக் முறை அளவுத் தொடரில் எந்த ஓர் அளவைக் கருதியபோதிலும் அதுவும், மேற்கூறிய முறையிலேயே தொடர்பு கொண்டுள்ளது. உதாரணமாக செண்டி மீட்டர் என்ற அளவு அதற்கு வலப்பக்க அளவாகிய மில்லி மீட்டரைப்போல் 10 மடங்கு ஆகும் அதன் இடப்பக்க அளவாகிய டெசி மீட்டரில் பத்தில் ஒரு பங்கு ஆகும். எந்த அலகின் தொடரிலும், எந்த இடத்து அளவை எடுத்துக் கருதிய போதிலும், இதே தொடர்பைக் காணலாம். அடியிலுள்ள அட்டவணைகளில் மேலே கூறிய விளக்கங்களைக் காணலாம்.

I.	10 மில்லி	மீ,	கிரா.	லிட்.	=	1 செண்டி	மீ.	கிரா.	லிட்
	10 செண்டி	,,	,,	,,	=	1 டெசி	,,	,,	,,
	10 டெசி	,,	,,	,,	=	1	,,	,,	,,
	10	,,	,,	,,	=	1 டெகா	,,	,,	,,
	10 டெகா	,,	,,	,,	=	1 எக்டா	,,	,,	,,
	10 எக்டா	,,	,,	,,	=	1 கிலோ	,,	,,	,,

II. கிலோ	எக்டா	டெக்கா	மீட்டர் கிராம் லிட்டர்	டெசி	செண்டி	மில்லி
பத்து இலட்சம்	இலட்சம்	ப. ஆ	ஆ	நூ	ப	ஒ
ஆ	நூ	ப	ஒ	பத்தில் ஒன்று	நூற்றில் ஒன்று	ஆயிரத்தில் ஒன்று
1000	100	10	1	$\frac{1}{10}$	$\frac{1}{100}$	$\frac{1}{1000}$

அளவுகளின் பெயர்களின் ஒருமைப்பாடும், அலகுகளின் மேலின வரிசையோ, கீழின வரிசையோ எண்களின் தசம முறைக் குறியீட்டைப் பின்பற்றி யிருப்பதோ இவற்றின் அனுகூலங்கள் அடியிலுள்ள சில உதாரணங்கள் விளக்கிக் காட்டும். பழைய அளவுகளில் இருந்த சிக்கல்களும், புதிய அளவுகளின் தெளிவும் நன்கு விளங்கும்.

மிலி மீட்டரைச் செண்டி மீட்டராக மாற்றவும், மேலும் டெசி மீட்டர், மீட்டர்......என்ற இனங்களுக்கு மாற்ற அதைக் குறிக்கும் எண்ணில் அமையும் தசமப்புள்ளியை முறையே 1, 2, 3 ... தசமத்தானங்கள் இடப் பக்கமாகத் தள்ளிப்போடவேண்டும். கீழின அலகுகளாக மாற்ற அம்மாதிரியே 1, 2, 3...இடங்கள் வலப்பக்கமாக தசமப்புள்ளியை நகர்த்தி அமைக்கவேண்டும்.

63,57,582 மிலி மீட்டரை மேலினங்களுக்கு மாற்றவேண்டுமெனில்,

635758·2 செ மீ.
63575·82 டெசி மீ.
6357·582 மீட்டர்
635·7582 டெகா மீ.
63·57582 எக்டா மீ.
6·357582 கிலோ மீ.

என எவ்வித இடரின்றி படிப்படியான விடையை உடனடியாகக் கூறி விடலாம்.

அல்லது, அடியில் காட்டிய முறையில் அந்தந்த ஸ்தானத்தின் இடத்தில் அந்தந்த அலகின் பெயரை எழுதிவிடலாம்.

கி.மீ.	எக்டா மீ.	டெகா மீ.	மீ.	டெசி மீ.	செ. மீ.	மி. மீ.
6	3	5	7	5	8	2

பழைய முறையின் சிக்கலை ஓர் உதாரணத்தின் மூலம் எடுத்துக் காட்டினால்தான் மெட்ரிக் முறையின் சிறப்பு விளங்கும்.

6357582 அங். மேலினங்களுக்கு மாற்று :

```
12 | 6357582 அங்.
 3 | 529798 அடி 6 அங்.
22 | 176599 கஜ. 1 அடி
10 | 8027 சங். 5 கஜ.
 8 | 802 பர். 7 சங்.
     100 மை. 2 பர்.
```

இவ்வகைகளில் எத்தனை சிக்கல்கள் உள்ளன என்பதை அறியுங்கள்.

விடை : 100 மை 2 பர் 7 சங் 5 க 1 அ 6 அங்.

மெட்ரிக் முறை அலகுகளின் இனம் மாற்றல் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், என்ற செய்கைகளைச் சாதாரண எண்களுக்குச் செய்வது போலவே செய்து விடையில் தசமப் புள்ளியைத் தக்க இடத்தில் பொருத்தி அதன் பொருளை அறியவேண்டும்.

மற்றோர் உதாரணம்: ஒரு கிலோ கிராம் சர்க்கரை ரூ. 1·19 வீதம் 3·8 கி. கிராம் விலை என்ன ?

$1{\cdot}19 \times 3{\cdot}8 =$ ரூ $1{\cdot}19 \times 3$ ரூ. $3{\cdot}57$

$\times$ ரூ $1{\cdot}19 \times {\cdot}8$ $\quad {\cdot}952$

ரூ. 4.522

ரூ 4·52 ந. பை. விடை.

நாணயங்களும் தசம முறையைப் பின்பற்றியுள்ளது கவனிக்கத்தக்கது.

இத்தகைய மெட்ரிக் முறை அலகுகள் மேலே விவரித்துள்ள பல்வேறு அனுகூலங்களைக் கொண்டுள்ளதையும் அவற்றின் நுட்பங்களையும், மற்ற எம்முறையைக் காட்டிலும் இது மலான சிறப்புக்கொண்டது என்பதையும் பிள்ளைகளுக்கு ஆங்காங்கு சந்தர்ப்பம் ஏற்படும்போதெல்லாம் எடுத்துக் காட்டவேண்டும். நாடெங்கும் ஒரே மாதிரியான அலகுகள் பயன்படுவது, மக்களின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் விருத்தி செய்யும் என்பதைப்பற்றி யாதொரு ஐயமும் இல்லை. இம்முறை அலகுகளின் சிறப்பை இடையறாது பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டுவதே ஆசிரியராகிய நாம் செய்யும் மேலான தொண்டு ஆகும்.

கணித விளையாட்டுகள் (2)

V. R. Subramanian
H.M.A.C.C. Factory Ele. School, Madukkarai

எண் அடுக்கு விளையாட்டில் 1 முதல் 20 வரை சூத்திரம் கண்டுபிடித்தீர்களா? இல்லையேல் கீழே கண்டுள்ளபடி அடுக்கி வைத்துப் பாருங்கள்.

1, 11, 2, 16, 3, 12, 4, 20, 5, 13, 6, 17, 7, 14, 8, 19, 9, 15, 10, 18.

கூட்டல், கழித்தல், வகுத்தல் கலந்தது.



இம்மாதிரி கட்டம் வரைந்து இஷ்டமான எண்களை எழுதிக் கொள்ளச் செய். குறுக்காக 2+6+4 கூட்டச் சொல் 5+6+3 கூட்டச்சொல் பிறகு சுற்றி 2+3+4+5 கூட்டச் சொல்லி முன்னிரண்டு கூட்டல் விடைகளைச் சேர்த்து 3வது கூட்டல் விடையை அதிலிருந்து கழிக்கச் செய்து மீதியை 2ல் வகுக்க 6 வருவதை கவனிக்கலாம். ஒருவன் பலகையில் ஒரு கணக்கு செய்துகொண்டு மற்றொருவனை மத்தியிலுள்ள எண்ணை கண்டுபிடிக்கச் சொல்லி விளையாடலாம். கூட்டல், கழித்தல், வகுத்தல் பயிற்சிகள் சுறுசுறுப்பாகச் செய்ய இவை உதவும்.

பெருக்கலும் கழித்தலும்

கு.	கோ.	கு.	கோ.	கு.	கோ.
1	1	2	2	3	3

ஒரு பூசாரி சில பூக்களைப் பறித்து குளம் 1ல் போட பூக்கள் இரட்டித்தன. அதில் சிலவற்றை கோயில் 1ல் பூசை செய்து மீதி பூக்களை குளம் 2ல் போட மறுபடியும் இரட்டித்தன. முதல் கோயிலில் பூசை செய்த அளவே கோயில் 2ல் அர்ச்சித்து மீதியை 3ம் குளத்தில் போட இரட்டித்தன. அதை 3ம் கோயிலில் அர்ச்சித்தபோது முதல் இரண்டு கோயிலில் அர்ச்சித்த எண் பூக்களே இருந்தன என்றால் பறித்த பூக்கள் எத்தனை? பூசை செய்த பூக்கள் எத்தனை? (விடை பத்துக்குள் கண்டுபிடி) விடை; பறித்தது 7 பூசை செய்தது 8:

பெருங் கணக்கும் சிறு விளையாட்டும் (a) ஒரு கூடையில் சில பழங்கள் இருந்தன அவைகளை 2, 3, 4, 5, 6 ஆக எண்ணினால் முறையே மீதி 1, 2, 3, 4, 5 வரும். 7 ஆக எண்ணினால் மீதி இல்லை. கூடையிலிருந்த பழங்கள் எத்தனை? (விடை 119) (b) ஒரு கூடையில் சில பழங்கள் உள்ளன. அவைகளை 2, 3, 4, 5, 6 ஆக எண்ணி வைத்தால் 1 தான் மீதி 7 ஆக எண்ணும்போது மீதி இல்லை பழங்கள் மொத்தம் எத்தனை? விடை 301 (3 ஸ்தானத்தில்).

சொல் மயக்க விளையாட்டு: அண்ணன், தம்பி 2 பேருக்கு 3 தோசையை சமமாகப் பங்கிடு. துண்டு செய்யக் கூடாது. இதில் அண்ணன், தம்பி 2 பேர் என்று நிறுத்திப் படித்தால் மொத்தம் 3 பேருக்கு 3 தோசை பங்கிடும்போது ஒவ்வொருவருக்கும், 1 தோசை வீதம் கிடைக்கும் தானே!

பொருள் குற்றக் கணக்கு: முருகன் கோவிந்தன் ஆகிய இருவர் வீட்டிற்கு மத்தியில் ஒரு சேவல் முட்டையிடுகிறது. யார் எடுத்துக் கொள்வது? (சேவல் முட்டை இடாது என்ற பதில் பிள்ளைகள் சொல்லவேண்டும்) இவை போன்று பல கணக்குகள்.

யுக்திக் கணக்குகள்: (a) ஒரு மரத்தில் 100 பறவைகள் இருந்தன. ஒரு பறவையைச் சுட்டான். மீதி எத்தனை இருக்கும்? எல்லாம் பறந்து போயிருக்கும் என்ற இயற்கை சுபாவத்தையறிந்து பதில் சொல்ல வேண்டும் (b) ஆடு, புல், புலி, ஒரு சர்க்கஸ்காரனிடம் இவை மூன்றும் இருந்தன. அவன் ஒரு ஆற்றைக் கடக்கவேண்டும். ஓடத்தில் அவனும் ஒரு பொருளும் மட்டுமே ஏற்றப்படும் அப்படியானால் மூன்றும் மறு பக்கம் செல்வதெப்படி? முதலில் ஆட்டைக் கடத்து. புலி புல்லைத் தின்னாது. அடுத்து புலியைக் கடத்தி ஆட்டைத் திருப்பிக்கொண்டு வந்து பிறகு புல்லைக் கடத்தவேண்டும். கடைசியாக மறுபடியும் ஆட்டைக் கொண்டு செல்லலாம் (c) கிருஷ்ண தேவராயர் முன் அமைச்சர் அப்பாஜி 17 யானைகளை 3 சகோதரர்களுக்கு அவர்கள் தந்தை எழுதிவைத்தபடி பங்கிட்ட கதை அனைவருக்கும் தெரிந்திருக்கலாம். பாதி மூத்தவனுக்கும் 3ல் ஒரு பங்கு அடுத்த தம்பிக்கும் 9ல் 1 பங்கு மற்றொரு தம்பிக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். அரசர் யானையையும் சேர்த்து 18 ஆக்கி எழுதி வைத்தபடி 9, 6, 2 என்று பங்கிட்டு அரசர் யானையை அனுப்பி விட்டார்.

சொல் நயக் கணக்கு (அல்லது) இலக்கியக் கணக்கு. இப்பாடலைக் கவனியுங்கள்:—

பூனைக்கு ஆறுகால் புள்ளினத்துக்கு ஒன்பது கால் ஆனைக்குக் கால் பதினேழு ஆனதே—மானேகேள் முண்டகத்தின் மீது முழு நீளம் பூத்ததுண்டு கண்டதுண்டு கேட்டதில்லை காண்—(கவி காளமேகம்) இந்தப் பாடலில் புள்ளினத்துக்கு ஒன்பதேகால் என்பதற்கு பறவைக்கு இரண்டே கால் தான். அதிகமோ குறைவோ இல்லை என்பதை விளக்கவேண்டும். $9 \times \frac{1}{4} = 2\frac{1}{4}$ படித்தால் இரண்டே கால். 2 கால்கள்தான் என்பதை உறுதியாக்குகிறது. அதே போல் ஆனைக்கு பதினேழே கால் என்பதையும் விளக்குகிறது $17 \times \frac{1}{4} = 4\frac{1}{4}$ படிக்கும்போது நாலே கால்தான். அதிகமோ குறைவோயில்லை என்பதைத்தான் நிர்ணயம் செய்கிறது.

இப்படியே இன்னும் பல கேட்டும், படித்தும் சேகரிக்கலாம். இவைகளைப் பாடதிட்டத்துடன் இணைத்து அவ்வப்போது போதித்தால் பிள்ளைகளுக்கு கணிதம் கட்டாயம் இனிக்கும் அறிவை வளர்க்கும் அமுத சுரபியுமாகும் என்பதில் ஐயமில்லை.

ஸபேசன் பால பிருந்தாவனம்

23-4-1963ல் மாலை 5 மணிக்கு ஸபேசன் பால பிருந்தாவனத்தின் பெற்றோர் தினம் கொண்டாடப்பட்டது. இப் பாடசாலையை நடத்தும் இந்தியக் கல்வி அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஸ்ரீ டி. எம். நாராயணசாமி பிள்ளை தலைமை வகித்தார். குழந்தைகள் அபிநய நடனங்களாலும் மற்ற விளையாட்டுக்களாலும் வந்திருந்தவர்களை மகிழ்வித்தனர்.

முதல் வருஷாந்தர அறிக்கையை பள்ளி நிர்வாகக் குழுவின் காரியதரிசி ஸ்ரீமதி சரஸ்வதி ஸ்ரீனிவாஸன் படித்தார். அந்த அறிக்கை இவ்வட்டாரத்திற்கு இப்பள்ளி எவ்வளவு அனுகூலமாய் இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டது. பள்ளியில் நடத்தப்படும் திட்டங்களை விவரித்தார். பள்ளிக்கு நன்கொடை வழங்கினவர்களுக்கு நன்றி செலுத்தினர். தென்னிந்திய ஆசிரியர் சங்கக் கல்வி ஆராய்ச்சிக் குழு இப்பள்ளிக்கு உதவி புரிவதையும், குழந்தைகளின் வளர்ச்சி பேச்சு இவைகளின் ஆராய்ச்சிக்கு இப்பாட

சாலையை உபயோகப்படுத்துவதையும் குறிப்பிட்டுச் சொன்னார்.

ஸ்ரீ டி. எம். நாராயணசாமி பிள்ளை தங்கள் உரையில் சர்க்காரும், முனிசிபாலிடியும் சிறு குழந்தைகளின் படிப்புக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று வேண்டினார். ஏனென்றால் இச் சிறு பிராயத்தில் தான் குழந்தைகளின் மனோவளர்ச்சி, உடல், குணம், சமூக உணர்ச்சி, ஒழுங்குமுறை, சுத்தம் முதலிய நல்ல குணங்கள் படியக் கூடிய காலம். கல்வி ஆராய்ச்சிக் குழுவின் செயல்களையும், முக்கியமாக குழந்தை வளர்ச்சியைப் பற்றிய ஆராய்ச்சியைப் பற்றியும் புகழ்ந்தார்.

ஆரம்பத்தில் பாடசாலையின் டைரக்டர், மிஸஸ். எச்.எஸ். சார்லஸ் அம்மையார், தலைவரையும் பெற்றோர்களையும் வரவேற்றுப் பேசினார்.

கல்வி ஆராய்ச்சிக் குழுவின் தலைவர் ஸ்ரீ ஆர். கிருஷ்ணமூர்த்தி அய்யர் பாடசாலையின் அலுவல்களைப் பாராட்டிப் பேசினார்.

எஸ். நடராஜன்
காரியதரிசி

பண்ணைச் செய்திகள்

பருத்தியை மானுமாரிப் பயிராகச் செய்பவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் செய்வதுபோல சில கலப்புப் பயிர்களையிட்டு இலாபமடையலாம்,

உளுந்து, கொள்ளு, திணை, நிலக்கடலை, கொத்தமலி, ஆமணக்கு, எள் போன்ற பயிர்களை நிலத்தின் மண்வாகுக்கு ஏற்றார்போல தேர்ந்தெடுத்துப் பயிரிடலாம்.

இதனால் ஏக்கர் ஒன்றுக்கு உபரிச் செலவு ரூ. 6 லிருந்து ரூ. 12 வரை ஆகும். உபரி வருமானம் ரூ. 25-லிருந்து ரூ. 45 வரை கிடைக்கும்.

இதரப் பிராந்திய பருத்தி விவசாயிகளும் இதைப் பின்பற்றி லாபமடையலாம்.

கோடையில் தென்னைக்குத் தண்ணீர் வாருங்கள்

கோடையில் தண்ணீரில்லாவிட்டால் தென்னை திடம் குறையும். ஆகையால் கோடையில் தென்னந்தோப்புக்குப் பாசனம் செய்யவும்.

கடுங்கோடை நிலவும் மேலக்கடற்கரைப் பிராந்தியங்களில் இலை வாடுவதாலும், குறும்பைகளும், பிஞ்சுகளும் விழுவதாலும், பாளை விழுவதாலும் ஏற்படும் நஷ்டம் போதுமான தண்ணீர் இல்லாததால் தான். கோடைப் பாசனம் இத்தகைய நஷ்டத்தைத் தவிர்ப்பதல்லாமல் மரத்துக்கு 20 காய்கள் கூடுதலாக வைக்கச் செய்கிறது.

செய் நேர்த்தியாலும் உரத்தாலும் பலன் தரத்தவறிய மரங்கள் கோடைப் பாசனத்தால் மூன்றே ஆண்டுகளில் மரம் ஒன்றுக்கு 5-லிருந்து 20 காய்கள் கூடுதலாகக் காய்த்தன.

கடற்கரையை ஒட்டிய மணற்பாங்கான இடங்களில் தென்னைக்கு கடல் நீரைப் பாய்ச்சலாம். நிலைக்கு தகுந்தாற்போல பாத்திப் பாசனமாகவோ படுகைப்பாசனமாகவோ செய்யவும். மணற்பாங்கான நிலத்துக்கும், குறுமண் நிலத்துக்கும் வாரம் இருமுறையும், ஈரப்பிடிப்பான நிலங்களுக்கு வாரம் ஒரு தடவை அல்லது பத்து நாட்களுக்கு ஒரு தடவையும், பாசனம் செய்வது நல்லது.

பாசனத்தின் முழுப்பலனையும் பெற முறையாக மரங்களுக்கு எருபோட வேண்டியது அவசியம்.

செய்தித் திரட்டு

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை
47-ஆம் ஆண்டு விழா 21-4-1963

"நல்ல ஒழுக்கமும் கடவுள் பக்தியும், தொழிற் பயிற்சியும், மாணவர்களின் அன்றாடத் தேவைகளைத் தாங்களே செய்துகொள்ளும் பயிற்சியும் நன்கு அளிக்கப்பட்டு வரும் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையைக்கண்டு, இது மேலும் மேலும் வளர்ந்து சிறந்து நாட்டுக்குப் பெருந்தொண்டு என்றும் புரியும்" என்று சென்னை அரசின் செய்தித்துறை அமைச்சர் திரு. கோ. பூவராகவன் அவர்கள் ஆண்டு விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர். இந்துமத பாடசாலையும், அதனை நடத்துபவர்களும், அதன் ஆசிரியர்களும், ஒரே கருத்துடன் குழந்தைகளுக்கு ஆற்றி வரும் நற்பணியைப் பாராட்டிக் கூறினர். பாடசாலையின் பணிகளை இன்றைய சமுதாயமும் வருங்கால சமுதாயங்களும் பாராட்டிப் பின்பற்றி நலமடையும் என்று அமைச்சர் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்.

செங்கற்பட்டு மாவட்டத்தின் வருமான வரித் துறையின் முதல் அலுவலர் திரு. ஆர். இராமக்கிருட்டிணன் அவர்கள் கொடியேற்றி வைத்தனர். இரண்டாவது வருமான வரி அலுவலர் திரு. கோபிநாத் அவர்கள் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினர். சென்னை அரசின் செய்தித் துறை அலுவலர் திரு.வ. இராச. மனோகரன் எம். எ., அவர்கள் கல்வி கற்கும் மாணவர்களுக்குக் கருத்துள்ள அறிவுரைகளைக் கூறினர்.

சென்னை சிட்டி பாளயகாட் கம்பெனி, சிங்கப்பூர், பினங்கு சித்திரா பளயகாட் கம்பெனி ஆகியவைகளின் உரிமையாளர் உயர் திரு. மா. சுப்புராயன் அவர்கள் பாடசாலை நடைமுறைகளைப் பாராட்டி அதன் நன்மையைக்கருதி ரூபாய் 10,000 நன்கொடை அளித்தார். அமைச்சர் அவர்கள் அத்தொகையைப் பெற்றுப் பாடசாலைச் செயலாளர் அவர்களுக்கு அளித்தார்.

மாணவர் இல்லத்தில் ஒரு வேளை விருந்து உணவுக்காகப் பாடசாலையின் பழைய மாணவர் திரு. அமோலசந்த் சவுகார் அவர்கள் ரூபாய் 301 நன்கொடை அளித்தார். செயலாளர் திரு, வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் யாவருக்கும் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

———

எகோ (ECHO)

(ஏப்ரல் வெளியீடு)

நைரோபி ஸெமினர்

'கெனியா' கல்வியமைச்சரின் நிரந்தரக் காரியதரிசியாகிய திரு. W. D. கிரெக் என்பவர், 1963-ஆம் ஆண்டு ஜனவரி 2-6-இல் நடைபெற்ற WCOTP தலைமைப்பயிற்சி 'ஸெமினு'க்குத் தாம் விடுத்த செய்தியில், ஆசிரியர்சங்கங்களின் செயல்களைத் தாம் முழுமனதுடன் ஆதரிப்பதாக அறிவித்தார்; "இந் நாட்டுக்கல்வியமைச்சர் இந்த உலக ஸம்மேளனத்தை வரவேற்று, இது இந்நாட்டுக்கல்வியைப்பற்றிய விஷயங்களில் முழுப்பங்கு எடுத்துக்கொள்ளத் தம் ஆதரவை அளிப்பதாக முன்னமேயே வாக்களித்துள்ளார்; சென்ற அக்டோபர் மாதத்தில் இந்நாட்டில் ஆசிரியர்கள் வேலைநிறுத்தஞ்செய்தது வருந்தத்தக்கதாயினும், அவ் வேலைநிறுத்தம் எங்கள் கொள்கையைப் பாதிக்கவில்லை"—என்றும் கூறினர்; கல்வியமைச்சர் எதிர்பாராமல் பிரான்ஸ் நாட்டுக்குப் பிரயாணம் செய்யவேண்டியிருந்ததனுல், அவர் அக்கூட்டத்திற்கு வந்து உபந்யாசம் செய்யமுடியாத நிலைமையையும் அறிவித்தார். அவருடைய சொற்கள் அங்கு வந்திருந்த ஆசிரியர்தலைவர்களுக்கு உணர்ச்சியை ஊட்டின; பொதுவாக, ஆசிரியர்சங்கங்களுக்கும், சிறப்பாக அக் கூட்டத்துக்கும் பரந்த—பலவற்றையும் உள்ளடக்கிய—வழிதுறைகளை வகுத்துக்காட்டின.

(1) ஆசிரியத்தொழிலுக்கு உரிய நிபந்தனைகளையும் விதிகளையும்பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துதல்; (2) ஆசிரியர்கள் தொண்டு, திறமை, நாணயம் இவற்றில் உயர்ந்த குறிக்கோளை அடைதற்கும் தம் நிலையைத் தாமே உயர்த்திக்கொள்ளுதற்கும் உரிய ஸ்தாபனமாகத் தொண்டு செய்தல்; (3) கல்விப்பிரச்சினைகளைப்பற்றித் தக்க அறிவுரையைக் கூறி, தங்கள் தொழிலனுபவக்கருத்துக்களை வெளியிடுஞ் சங்கமாகத் தொண்டு செய்தல்—என்னும் இம் மூன்று முக்கியமான நோக்கங்களைக் கொண்டவையே தேசீய ஆசிரியர்சங்கங்கள் என்று தாம் கருதுவதாக, கிரெக் கூறினர்.

'கெனியா' கல்வியமைச்சர் தெரிவித்த—ஊக்கத்தையும் அறிவையும் ஊட்டித் தெளிவுறுத்தும்—இக் கொள்கைக்கூற்று, 'நைரோபி ஸெமினரை' WCOTP-இன் சரித்திரத்தில் உண்மையில் மிக்க பயன் உள்ளதாகச் செய்ய உதவிற்று. ஒன்பது ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து ஆசிரியர்சங்கங்களின் பிரதிநிதிகள் அங்கு விஜயஞ்செய்திருந்தனர்; 'கெனிய' தேசீய ஆசிரியர்சங்கம் (The Kenya National Union of Teachers) அவர்களுக்கு வேண்டிய உணவு உறையுள் முதலிய வசதிகளைக் கொடுத்துதவி விருந்தோம்பிற்று. "அக் கண்டத்தில் உள்ள அறியாமை, வறுமை, நோய் என்னும் மூன்று பெரும்பகைகளை அழித்துத் தொலைப்பதற்கு, ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள அரசாங்கங்கள் அந்த அந்த நாட்டின் ஆசிரியர்சங்கங்களோடு ஒத்துழைக்கவேண்டும்" என்று KNUT-இன் தலைவரான திரு J. B. வாம்புகு என்பவர் தம் சொற்பொழிவில் வேண்டிக்கொண்டார்; "அறியாமையிலிருந்து வறுமை பிறக்கின்றது. அவ் வறுமையிலிருந்து நோய் தோன்றுகின்றது. இந்த

'விஷச்சக்கரத்தைத்' தொலேப்பதற்கு முதல்முதல் நாம் அறியாமையைத் தொலைத்தல் வேண்டும். பின்னர், மற்றைப் பகைகள் தாமே புறங்காட்டி ஓடிவிடும்"—என்று அவர் விளக்கிக் கூறினர்.

'ஜீன்ஸ்' கலாசாலையின் முன்னாள்தலைவரும் கெனியா சட்டசபையின் தேசீய அங்கத்தினருமான திரு. ஜான் போர்டர் என்பவர், நாட்டின் செல்வத்தைப் பெருக்கவேண்டுமாயின், கிராமமக்களுக்கு மேலும் மேலும் ஊக்க மூட்டிப் பயிற்சியளித்தல்வேண்டும்; அதற்கு மிகுதியாக முதியோர்கல்வித்தொண்டுகளைச் செய்வது அவசியம்" என்று வற்புறுத்திக் கூறினர்; "இம் முதியோர்கல்வித்தொண்டினை மிகப்பெரிய அளவில் மேற்கொண்டு, மாறுபட்ட சூழ்நிலையிலும் தொடர்ந்து உயிர்வாழக்கூடிய செல்வவளத்தைக் 'கெனியா' நாட்டுக்குப் படைத்தற்கு வேண்டிய மனிதசக்தியைப் பயன்படுத்தல் வேண்டும்"—என்றும் வலியுறுத்தினர். "கெனியாவில் உள்ள பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட முப்பது லக்ஷம் மக்களை இன்னும் அதிக உற்பத்தியைச் செய்யும்படி தூண்டுவதே நம் முதற்குறிக்கோள்; ஆயினும், இப் பரந்த முதியோர்கல்வித்திட்டமும் பயிர்த்தொழில், பயிர்பராமரிப்பு என்பவற்றைமட்டும் உட்கொண்டதாயின், அது போதிய பயனைத் தாராது"—என்று எச்சரிக்கை செய்தார்; சமூகம், தேசபரிபாலனம் இவற்றைப்பற்றிய செய்திகளையும் கட்டாயம் போதிக்கவேண்டும்; உயர்ந்த சுகாதாரநிலையில் வாழ்தற்கும், மாறிக்கொண்டே இருக்கும் நிலையற்ற சூழ்நிலைக்குத் தக்கவாறு அனுசரித்து வாழ்தற்கும், மக்களுக்கு அவசியம் கற்பிக்கவேண்டும்"—என்றும் அறிவுறுத்தினர்.

'நைரோபி ஸெமினு'ரின் முடிவில் நடைபெற்ற விருந்தில், பொருளாதாரத்திட்டத்துக்கும் சட்டவிஷயங்களுக்கும் உரிய பாராளுமன்றக் காரியதரிசியான Dr. J. G. கியானே என்பவர், கெனியாவில் உள்ள இக்காலக் கல்வித்திட்டத்தின் குறையைப்பற்றிப் பின்வருமாறு கூறினர்: "பல்கலைக்கழகப்பட்டங்களைப் பெற்ற நம் உயர்தர கலாசாலைமாணக்கர்கள் ஷேக்ஸ்பியர், மில்டன் முதலிய புலவர்களின் நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டிப் பேசுஞ் சக்தியோடு வெளிவருகின்றனர்; பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சரித்திரத்தைச் சொல்லும் ஆற்றல் பெற்றவராய் இருக்கின்றனர்;...ஆயின், பிற்காலத்தில் வேலையில் அமர்த்திக்கொள்ளும் முதலாளிகள், அவர்களை அத் தொழில்களுக்குத் தகுதியுடையவராகச் செய்தற்கு, மேலும் ஓரிரண்டு ஆண்டுகள் செலவிட வேண்டியிருக்கின்றது...கல்வி, பயன் பெற்ற வாழ்க்கையை நடத்துதற்கு ஏற்ற பயிற்சியை, மாணக்கருக்கு அளித்தல் வேண்டும்."

ஸர்வதேச ஸர்வகலாசாலை

ஸர்வதேச ஸர்வகலாசாலையொன்றை ஸ்தாபிப்பதற்காக WCOTP நிர்வாகக்கமிட்டி தன் கருத்துக்களையும் திட்டங்களையும் ஐக்கிய நாடுகளுக்குச் (UN) சமர்ப்பித்துள்ளது. சென்ற ஆகஸ்டு மாதத்தில் 'ஸ்டாக்ஹோம்' நகரில் கூடிய WCOTP கூட்டத்தில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள்தலைவராயிருந்த ஜெனரல் டுவைட் D. ஐஸன் ஹோவர் வெளியிட்ட கருத்தை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டவை இவை.

ஐக்கிய நாடுகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இத் திட்டங்களின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:

(a) உலக சரித்திரம், இராஜதந்திரம், அரசியல், சர்வதேசப்போக்குவரவு போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்காக, ஒருமுறை ஸர்வகலாசாலைப்

பட்டம்பெற்றவர் மேலும் படித்தற்குரிய நிலையில், கல்லூரியொன்றனை நிறுவுதல்.

(b) அக் கல்விஸ்தாபனம் ஏறத்தாழ 500 மாணக்கர்க்கு ஓராண்டும் படிப்பிற்குரிய வசதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் ; அதுவே இரண்டாயிரம் மூவாயிரம் மாணக்கருக்கு இரண்டாண்டுக்கல்வி அளிப்பதற்கும் ஏற்ற முறையில் வளர்ச்சி அடையுமாறு திட்டமிடல் வேண்டும்.

(c) ஜெனிவா நகரில் ஸர்வதேசக்கல்விநிலையங்கள் பல இருப்பதனல், அவற்றேடு இக் கல்விநிலையமாணக்கர் தொடர்பு வைத்துக் கொள்ளுதற்கு எளிதாயிருக்கும் முறையில், அந் நகரிலேயே இப் பல்கலைக் கழகத்தை நிறுவுவது நலம்.

(d) UN சபைத்தலைவரே இதற்கு சான்ஸலர் (exofficio) ஆக இருத்தல் வேண்டும். வைஸ்-சான்ஸலர் நிர்வாக அதிகாரியாய்த் தொண்டாற்றல் வேண்டும். பரந்த பிரதிநிதித்துவம் வாய்ந்த கவர்னர்களின் சங்கம் அவருக்கு வேண்டிய உதவியைச் செய்யும்.

(e) அந் நிலையம் ஸர்வசுதந்திரம் உடையதாய் இருத்தல் வேண்டும்; பாடத்திட்டங்களும் உள்நிர்வாகமும் அதன் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருத்தல் வேண்டும். அது ஐக்கியநாடுகளின் (UN) பொது மேற்பார்வை-ஒன்றற்கே உட்பட்டிருக்கும்.

(f) அந்த ஸ்தாபனம் மாணக்கரனைவரும் அங்கேயே உண்டு உறைந்து கற்பதற்கும் (residential). சர்வதேச மகாநாடுகள் கூட்டுதற்கும் உரிய வாய்ப்புக்களைப் பெற்றிருத்தல் வேண்டும்; அங்குச் சம்பளம் வசூலித்தல் வேண்டும் ; ஆயின், தாராளமாக உபகாரச்சம்பளம் அளிக்குங் கொள்கையும் இருத்தல் வேண்டும்.

நாட்டுக்குநாடு பரஸ்பர மதிப்பைக் காட்டுஞ் சங்கத்தின் கூட்டமொன்று, மெக்ஸிகோவுக்குத் தம் வணக்கத்தைத் தெரிவிக்க, U. S. A.-இல் உள்ள கன்ஸாஸ் நகரில் சென்ற ஜனவரிமாதத்தில் கூடிற்று. மூன்று நாடுகளின் முன்னள் தலைவர் மூவர் அக் கூட்டத்துக்கு விஜயஞ்செய்தனர். மேலே உள்ள படத்தில் இட

மிருந்து வலம்: U. S. A. முன்னுள்தலைவர் ஹாரி S. ட்ருமன்; மெக்ஸிகோவின் முன்னுள்தலைவர் மிகல் அலிமன்; (People—to—people) 'பீபிள்—டு—பீபிள்' நிர்வாகசபைத்தலைவர் ஜாய்ஸ் C. ஹால்; ஜெனரல் டுவைட் D. ஐஸன்ஹோவர். பிரசிடென்ட் ஐஸன்ஹோவர், இச் சங்கத்தின் தர்மகர்த்தாக்கள்சபையின் தலைவர் (Chairman of the people-to-people Board of Trustees) என்ற முறையில், சென்ற ஆண்டு ஸ்டாக் ஹோமில் நிகழ்ந்த WCOTP மகாநாட்டுப்பிரதிநிதிகளுக்கு உபந்யாசம் செய்தார்.

ஐரோப்பா:

உலகத்துன்பங்களை நீக்குஞ் சபையின் [Council on World Tensions] ஐரோப்பியக்காரியதரிசியின் காரியாலயத்தால், பள்ளிக்கூடங்களுக்கு என்று தனிஇயக்கமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அச்சபை, FAO-இன் பசிவிடுதலையியக்கத்தோடு ஒத்துழைத்து, உலகில் ''மனிதனும் பசியும்'' என்னுந் தலைப்பின்கீழ்ச் சிறப்பான பாடவரிசைகளை விரிவாக எழுதியுள்ளது.

அப் பாடமுன்னுரையில் விவரித்துள்ளபடி, போஷணைக்குறைவை எதிர்த்துச் செய்யும் போரில் இளைஞரும் ஈடுபடுதல் வேண்டும் என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்டுவதே அவ்வியக்கத்தின் நோக்கமாகும். அதனை எதிர்ப்பதற்குரிய உள்ளக்கிளர்ச்சியையும், வெற்றி பெறமுடியும் என்னும் நம்பிக்கையையும் உண்டாக்குதல்; இவ்வுலகில் மூலைமுடுக்குக்களிலுள்ள மக்கள் யாவரும் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை அடைதற்கு என்ன செய்யமுடியும் என்பதனை அவர்கள் அறியும்படி செய்தல்; உலகமக்களனைவரும் ஒன்றுபட்டு, பசியையும் வறுமையையும் ஒழிப்பதற்கு உழைக்கும் இப் போரில் தாமும் கலந்துகொண்டு, எல்லாநாடுகளுக்குமிடையே மேலும்மேலும் நல்லுறவு வளர்ந்து பரஸ்பரம் ஒருவரைஒருவர் புரிந்துகொள்ளுதற்கு இது உதவிசெய்யும் என்பதை அறிவித்தல்—என்னும் இந் நன்மைகளும் இதனால் விளையும்.

அப்பாடங்கள் பதின்மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கென்று தயாரிக்கப்பட்டவை. அப் பாடக்குறிப்பு முதன்முதல் உலகின் பல வேறு

பகுதிகளில் கிடைக்கும் உணவுவகைகளைப்பற்றியும், அவற்றைச் சமைக்கும் முறைகளைப் பற்றியும் விவரித்துக் கூறுகின்றது; பின்னர், மனிதன் உயிர்வாழ்தற்கு அவசியம் உண்ண வேண்டிய காரணத்தையும், அவன் உணவில் சேரவேண்டிய இன்றியமையாத பொருள்களையும் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது. மக்கள் பசிபட்டினியால் வாடுதற்கு உரிய காரணங்களும், அப் பிணியினால் மிக வருந்தும் உலகப்பகுதிகளும் அடங்கிய பட்டியொன்று தயார்செய்யப்பட்டுள்ளது.

அப் பாடக்குறிப்பு 'நம்பிக்கையுள்ள சமூகம்' (A Community of hope) என்று குறிக்கப்படும் FAO அவ்வேலையில் எடுத்துக்கொள்ளும் பங்கினையும் கூறுகின்றது ; பசிபட்டினியிலின்று விடுதலை அடைவிக்கும் இயக்கத்தில் இளைஞரின் உதவியும் வேண்டும் என்று அவர்களின் ஆசிரியர்களின்-மூலம் அவர்களை வேண்டிக்கொள்கின்றது ; "பசியால் வாடுவோருக்கு நாம் உணவு அளித்தல் கூடாது ; அவ்வுணவைத் தாமே உற்பத்திசெய்வதற்கு வேண்டிய உதவியைச் செய்தல் வேண்டும்"—என்றும் அறிவுறுத்துகின்றது.

அப் பாடங்கள் ஆங்கிலம், பிரெஞ்சு என்னும் இரண்டு மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளன. அவற்றைக் கீழ்க்காணும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் : The Council on World Tensions Fraternite Mondiale, European Secretariat, Centre International, Place des Nations, Geneva, Switzerland.

அமெரிக்காஸ் :

'உருகுவே' நாட்டில் உள்ள WCOTP-இன் கிளைச்சங்கமான Asociacion de Profesores de Ensenanza Secundariay Preparatoria del Uruguay என்பதனைச் சார்ந்த 'உருகுவே' நாட்டு செகண்டரி ஸ்கூல் ஆசிரியர்களுள் புகழ்பெற்ற சிலர் பிப்ரவரி 28-இல் அவ்வுலக ஸம்மேளனத்தின் தலைமைக்காரியாலயத்திற்கு விஜயஞ்செய்தனர்.

பிப்ரவரி மாதத்தில் WCOTP-இன் காரியதரிசியின் காரியாலயத்தினரைச் சந்தித்தவருள் தலைவர் பேராசிரியர் 'பெட்ரோ ஃபிகாரி' என்பவரும் ஒருவர். அவர் சென்ற ஆண்டில் 'சிலி' நாட்டில் உள்ள 'ஸந்தியாகோ' நகரில் நடைபெற்ற UNESCO கல்வித்திட்டமகாநாட்டிற்கு WCOTP-இன் பிரதிநிதியாகச் சென்றவர். உபதலைவர் பேராசிரியர் 'நெடாலியா பாஸ்டோர்', 'ஸீஞர் ஆல் ஸைட்ஸ் பெரினி', 'ஸெக்ரட்ரி-ஜெனரல் டாக்டர். மேரியா ஒஃபிரியா பிண்டோ டியாஸ்' ஆகிய இம்மூவரும் அவரோடு அங்குச் சென்றிருந்தனர். இம்மூவருள் முன்னையர் இருவரும் 'பெரு' நாட்டில் உள்ள 'லிமா' நகரில் WCOTP-இன் தூண்டுதலையும் ஆதரவையும் பெற்று நடைபெற்ற ஆசிரியர்களுக்கு உறையுள் கட்டிக்கொடுக்குந் திட்டத்தைப்பற்றி ஆராயுஞ் சங்கக்கூட்டத்தில் (Teachers' Housing Seminar) கலந்துகொண்டனர்.

WCOTP—ஸெக்ரடரி-ஜெனரல் அங்கு வந்திருந்த 'உருகுவே' ஆசிரியர்களுக்குத் தனிவிருந்து அளித்துச் சிறப்பித்தார். அப்பொழுது அக் கூட்டத்தினர் WCOTP-இன் தலைமைக்காரியாலயத்தைச் சுற்றிப் பார்வையிட்டனர். " உலக ஸம்மேளனத்தோடு முன்னையினும் நெருங்கிய உறவை அமைத்துக்கொள்வதற்கு இவ் வாய்ப்பு மிகப் பயன்படும். 'உருகுவே' நாட்டில் உள்ள பல்வேறு தேசீய ஆசிரியர்சங்கங்கள், WCOTP-யுடன் நெருங்கி உழைப்பதற்கு ஏற்றவாறு, கூட்டுச் சர்வதேசத் தொடர்புச் சங்கமொன்றனை அமைப்பதனைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர் " என்று தலைவர் ஃபிகாரி கூறினர்.

'ஈக்வேடார்' நாட்டில் உள்ள கல்வித்திட்டத்துறையினர் (The Educational Planning Department) தம் புதிய ஐந்தாண்டுத்திட்டத்தில்

(1962-67), ஆரம்பக்கல்வியைப் பெறுதற்குரிய 8,50,000 குழந்தைகள் தங்கிப் படிப்பதற்கு ஏற்ற கட்டிடங்களையும் பிற ஸௌகரியங்களையும் அமைத்து உதவுதல்வேண்டும். இப் பணியைச் செய்ய அந் நாடு 11,000 வகுப்பறைகளைக் கட்டவும் பழுதுபார்க்கவும் வேண்டும்; 5,000 கிராம ஆசிரியர்களை நியமித்தல்வேண்டும்; அவர்களுக்கு வேண்டிய உறையுளையும் அமைத்துக்கொடுத்தல்வேண்டும். இப்பொழுது அந் நாட்டில் போதிய ஆசிரியர்கள் இல்லை. அக் குறையை நிறைவாக்க, அந் நாட்டில் உள்ள போதனுமுறைப்பயிற்சியில் முழுஅளவுச் சீர்திருத்தத்தைச் செய்வதற்கு, அரசாங்கம் ஆராய்ந்துகொண்டிருக்கின்றது.

1961-62-இல், நூற்றுநாற்பத்தொன்பது தேசங்களிலிருந்து வந்து அமெரிக்கப் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் சேர்ந்து படித்த மாணுக்கரின் மொத்தத்தொகை 58,086. (1951-52இல், அத்தொகை 30,474). அவர்களுள் பாதிக்கு மேற்பட்டவர் சமீப, மத்திய, நெடுந்தூரக் கிழக்குநாடுகளிலிருந்து வந்தவராவர். பொறியியற்கலைக் கல்லூரிகளில் சேர்ந்து படித்த மாணுக்கரின் தொகையே மிக அதிகம்—22.4 சதவிகிதம்; இலக்கியம், சரித்திரம் முதலிய பாடங்களைப் (humanities) பயின்றவர் 19.2 சதவிகிதம். 30 சதவிகித மாணுக்கர் பிறர்உதவியின்றிப் படித்தனர்; 38 சதவிகிதத்தினர் தனிப்பட்ட ஸ்தாபனங்களின் உதவியைப் பெற்றவர்; 9 சதவிகிதத்தினருக்கு U. S. அரசாங்கம் உதவியளித்தது; 5 சதவிகிதத்தினர் வெளிநாடுகளின் உதவியைப் பெற்றனர்; 3 சதவிகிதத்தினருக்கு அரசாங்கங்களும் தனிஸ்தாபனங்களும் சேர்ந்து உதவின.

—NEA 'ரிஸர்ச் புல்லடின்'. USA. பிப்ரவரி, 1963.
[NEA Research Bulletin, U.S.A.]

சர்வதேசச்செய்திகள் :

WCOTP-இன் பிரிவுகளான இரண்டு ஐக்கியஸ்தாபனங்கள் இவ்வாண்டு 'ஸ்காட்லண்டு' தேசத்தில் 'எடின்பரோ' நகரில் கூடுகின்றன. 'ஆரம்பக்கல்வி, செகண்டரிக் கல்வி என்னும் இரண்டு பிரிவுகளுக்கும் போதிய ஆசிரியர்கள் இல்லாமை'—என்பதே அவ்விரண்டு கூட்டங்களின் விவாதத்துக்குரிய முக்கிய தலைப்பு ஆகும். IFTA-உம் (The International Federation of Teachers' Associations) சர்வதேச செகண்டரி ஆசிரியர்கள் ஐக்கியஸ்தாபனமும் (FIPESO) ஜூலை 24, 27 தேதிகளில் நடைபெறும் முதல்இறுதிக்கூட்டங்களில் சேர்ந்து கலந்துகொள்ளும். முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்கின்ற நாடுகளில் கட்டாயக்கல்விக்குரிய வயதினை அதிகப்படுத்துவதனுலும், ஆரம்பக்கல்வித் திட்டங்களை மிக விரிவுபடுத்துவதனுலும் விளையும் பிரச்சினைகளை IFTA ஆராயும்.

தி எடுகேஷனல் இன்ஸ்டியூட் ஆப் ஸ்காட்லாண்டு' (The Educational Institute of Scotland), IFTA ஆசிரியர் பற்றுக்குறையைப்பற்றிச் செய்யும் விவாதத்தின் குறிப்பை எழுதுவதற்கு ஒருவரை நியமிக்கும். இரண்டாவது தலைப்பைப்பற்றிய விவாதத்தைக் குறிப்பெடுப்பதற்கு The Syndicat National des Institutrices et Instituteurs (France) என்னுஞ் சங்கம் ஒருவரை நியமிக்கும்.

ஸர்வதேச ஸம்மேளனக் காரியாலயம்

வலப்பக்கத்திலுள்ள படம் தலைமைக்காரியாலய மாளிகைக்கு வருவோரை வரவேற்கும் புதிய WCOTP விளம்பரம். அவ் விளம்பரம், சட்டக் கதவிலுள்ள மூன்று மையப் பலகைகளில் உள்ளது. அது அச் சம்மேளனத்தின் அமைப்பு, கொள்கைகள், தொழில்கள் ஆகியவற்றை விளக்கமாக விவரித்துக் கூறும்; உலகம் முழுதும் உள்ள கிளைச் சங்கங்களை விளக்கொளி வீசிக் காட்டும் படம்ஒன்று முக்கியத்துவம் கொடுத்து அமைக்கப்பட்டுள்ளது. WCOTP- இன் பல நாட்டுக்காரியாலயங்களிலும் மகாநாடுகளிலும் சங்கக் கூட்டங்களிலும் (Seminars) பயன்படும்படி, ஆங்கிலம் பிரெஞ்சு ஸ்பானிஷ் என்னும் இம் மூன்று மொழிகளில் அவை சுருக்கமாக மொழிபெயர்க்கப்பட்டுத் தயாரிக்கப் பட்டுள்ளன.

உதவி 'ஸெக்ரடரி–ஜெனரல்'லான 'ஜான் M. தாம்ஸன்' என்பவர் இரண்டரை வாரம் ஐரோப்பாவுக்கு விஜயஞ்செய்து சுற்றிப் பார்த்துவிட்டு, இம் மார்ச்சு மாதத்தில் திரும்பி வந்தார். அவர் 'பாரிஸ்' நகரில், WCOTP 'பாரீஸ் ஆபீஸ் டைரக்ட'ரான வில்ஹெம் எபர்ட் என்பவரோடும், Unesco காரியதரிசியின் காரியாலய அங்கத்தினரோடும், 'ஆசிரியத்தொழிலின் நிலை' என்பதைப்பற்றியும், 'கலையின்மூலம் மனிதனை அறிதல்' (Man Through His Art) என்னும் WCOTP-Unesco திட்டத்தைப்பற்றியும் கலந்து ஆலோசித்தார். WCOTP-இன் ஸர்வதேசக் கிளைச்சங்கங்களான ICHPER, ICET என்னும் இரண்டின் திட்டங்களும் 'பாரிஸி'ல் Unesco-ஓடு கலந்து விவாதிக்கப்பட்டன. அவையே லண்டனிலும் ICET-இன் காரியதரிசி—பொக்கிஷதார் ஆகிய 'டேவிட் ஜான்ஸ்டன்' என்பவரோடும் கலந்து ஆலோசிக்கப்பட்டன.

'ஐக்கிய நாடுகளைப்பற்றிக் கற்பிப்பதன்மூலம் ஸர்வதேசங்களும் ஒன்றனைஒன்று புரிந்துகொள்ளுஞ் சக்தியை வளர்த்தல்' என்னுந் திட்டமே, WFUNA, Unesco இவற்றின் அதிகாரிகளோடு 'ஜெனிவா'வில் தாம்ஸன் கலந்து பேசிய கூட்டங்களில் முக்கிய கவனத்தைப் பெற்றது. அது 1964-க்கு என்று WCOTP-ஆல் வகுக்கப்பட்ட திட்டம். அவர் அப் பிரயாணத்தில், WCOTP 'பிரசிடென்ட்' சர் ரோனல்டு கௌல்டு என்பவரோடும், நிர்வாகக்கமிட்டியங்கத்தினர்களான 'தியோபில் லிச்னர்', R. மிஷல், 'கூயன் ஹூசின்', A. W S. ஹச்சிங்ஸ் என்பவர்களோடும் அத் திட்டத்தின் மற்றைப்பகுதிகளைப்பற்றிக் கலந்து ஆலோசித்தார்.

ஆப்பிரிக்கா

'யுகாந்தா' ஆசிரியர்சங்கத்தின் (UTA) 1963-ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம் (Calender), அளவிலும், வடிவிலும், விளக்கத்திலும் WCOTP காலண்டரின் மாதிரியைச் சாதுரியமாகப் பின்பற்றி, ஏற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளதாகும். அதில் உற்சாகம் அளிக்கும் நிழற்படங்கள் பல இருக்கின்றன. அது அச் சங்கம் (UTA) இப்பொழுது ஆற்றிவருந் தொண்டுகளை விளக்கமாகக் கூறுகின்றது; அச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட வருஷமாகிய 1944-இலிருந்து அடைந்துவரும் முன்னேற்றத்தையும் முறையாக விளக்கிக் கூறுகின்றது.



1958-இல் அச்சங்கம் (UTA) WCOTP-ஓடு இணைக்கப்பட்டது. அதுமுதற்கொண்டு அச் சங்க வங்கத்தினர்கள் WCOTP கூட்டும் பிரதேசங்களுக்கும் உலக மகாநாடுகளுக்கும் விஜயஞ் செய்துள்ளனர். பன்னிரண்டு காலண்டர் மாதங்களுள் ஆறுமாதங்களுக்குரிய முக்கியச் செய்தி, UTA-இன் ஸர்வ தேசத்திட்டத்தின் சில பகுதிகளையும், WCOTP-இன் வேலைகளோடு தனக்கு உரிய தொடர்பினையும்பற்றியதாகும்.

'கெனியா' நாட்டில் 'நைரோபி' நகரில் ஜனவரி மாதத்தில் நடைபெற்ற WCOTP தலைமைப்பயிற்சி ஸெமினரில் (Leadership Training Seminar), 'யுகாந்தா' ஆசிரியர்கள் பதினொரு ர் கலந்துகொண்டனர். அக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட நிழற்படங்களும் இக் 'காலண்டரில் இடம்பெறுகின்றன.

சென்ற பிப்ரவரி மாதம் 22-ஆம் தேதிமுதல் 28 முடிய நடைபெற்ற WCOTP 'இண்டர்ன்ஷிப்' திட்டத்தில் 'ந்யாஸாலாண்ட்' தேசீய ஆசிரியர் சங்கத்தின் (Nyasaland National Teacher's Association) முன்னாள்காரியதரிசியான 'ஆட்ஸன் ஃபண்டா' என்பவர் கலந்துகொண்டார். அவருடைய அவ் வேழ்நாள் வேலைத்திட்டத்தில், WCOTP-ன் உலகம்முழுதும் பரவியுள்ள தொண்டுகளைப்பற்றி அவ்வத்துறைத்தலைவரிடமிருந்து சுருக்கமான குறிப்புக்களைப் பெறுதல், அந்தச் சம்மேளனம் ஆசியா, அமெரிக்காஸ், ஆப்பிரிக்கா ஆகிய மூன்று நாடுகளுக்கு வகுத்துள்ள பிரதேசத்திட்டங்கள், அந்த ஸ்தாபனத்தின் நூல்வெளியீட்டுத்துறையைப்பற்றிய பூர்த்தியான அறிவைப் பெறுதல் ஆகியவை இடம்பெற்றன. அவர் U. S. A தேசீய கல்விச்சங்க நிலையத்தில் ஒரு நாள் தங்கினார்; ஆங்குத் தொடக்கக்கல்வியிலும் 'ஸெகண்டரி' கல்வியிலும் திறமையும் தேர்ச்சியும் பெற்ற ஆசிரியர்களோடு அளவளாவி இன்புற்றார்; N.N.T.-க்கு எழுந்த பிரச்சினைகளை விவாதித்தல், அச் சங்கம் தன்னைப்பலப்படுத்திக்கொள்ளுதற்கு WCOTP-இன் தொண்டுகளையும் வெளியீடுகளையும் மிக்க பயன்பெறும் முறையில் மேற்கொள்ளவேண்டிய வழிகளை அறிதல்—ஆகிய செயல்களில் ஈடுபட்டார்.

அவர் 1922-இல் 'ந்யாஸாலாண்'டில் பிறந்தார்; இரண்டாம் உலகப்போரில் தொண்டாற்றி மிக்க அனுபவம் பெற்றார்; 1948-இல் ஆசிரியர்-

தொழிலைத் தொடங்கினர்; 1953-இல் ஒரு 'ஸீனியர்' தொடக்கப்பள்ளியில் தலைமையாசிரியர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். தாம் ஆசிரியராய் இருந்த காலம் முழுதும், அந்நாட்டு ஆசிரியர்சங்கத்தோடு நெருங்கிய தொடர்பினை வைத்துக்கொண்டிருந்தார்.

ஆயினும், அவர் 1960-இல் N. N. T. A.-வின் ஸெக்ரடரி-ஜெனரல்-பதவியை ராஜினமா செய்து, அந் நாட்டில் ஏறத்தாழ 50 பாடசாலைகள் உள்ள ஒரு ஜில்லாவுக்கு மேற்பார்வையாளர் பதவியை (Superintendent) ஏற்றுக்கொண்டார். அவர் 1962–ஆகஸ்ட் முதல் U. S. A.-யில் தங்கி, மேற்கு 'மிஷிகன்' பல்கலைக்கழகத்திலும், 'நியூஜெர்ஸி'-யில் உள்ள 'ட்ரென்டன்' நகரிலும் பல சிறப்பான கல்விப் பயிற்சிகளில் ஈடுபட்டுக்-கொண்டிருக்கின்ஞர்.

ஆசியா :

கொரியா நாட்டுக் கல்விச்சங்கங்களின் ஸமஷ்டி (The Korean Federation of Education Associations), WCOTP–இன் நூல்களும் பத்திரிகைகளும் வெளியிடும் திட்டத்தில் ஒரு புதிய கருத்தைப் புகுத்தியுள்ளது. K.F.E.A. தான் மாதந்தோறும் தவருமல் வெளியிடும் 'புதுக் கல்வி' (Sae KyoYuk (The New Education) —என்னும் பத்திரிகைக்கு அநுபந்தமாக எகோ பத்திரிகையைக் கொரியன் மொழியில் அச்சிட்டு வெளியிட்டு வருகின்றது. இம் முறையே WCOTP–இன் செய்திகள் அந் நாடு முழுதும் பல கல்வி நிலைகளில் உள்ள ஆசிரியர்களுக்குப் பரப்பப்படுகின்றது. WCOTP–ஸெக்ரடரி-ஜெனரல் K.F.E.A.இன் இத் தீரச் செயலைப் பாராட்டியுள்ளார்; இவ்வாறு WCOTP-இன் பிற உறுப்புச்சங்கங்களும் தம் வெளியீட்டுத்திட்டத்தோடு எகோ-வையும் இணைத்துக்கொள்ள விரும்பினல், அவற்றிற்கு அந்தஉரிமைகளை அளிப்பதற்குத் தம் சம்மதத்தையும் தெரிவித்தார்.

'வியட்காங்' பிரதேசத்தில் பயங்கரக்கூட்டத்தார் செய்த கொடுஞ் செயல்களுக்கு ஆளாகித் துன்புறும் ஆசிரியர்களுக்கும் மாணுக்கர்க்கும் உதவிசெய்ய உபகாரநிதியொன்று வசூல்செய்யப்பட்டுள்ளது. அதற்குத் தாராளமாக நன்கொடை அளித்துதவிய 'ஸ்காட்லாண்டு' கல்விக் கழகத்துக்கும், 'நெதர்லாண்ட்ஸ்' Genootschap van Leraren aan Nederlandse Gymnasia en Lycea—என்னுஞ் சங்கத்துக்கும் அந்நாட்டு ஆசிரியர்–பொதுச்சங்கத்தின் செக்ரடரி—ஜெனரலான 'கூயன் ஹுசின்' என்பவர் தம் மனமார்ந்த வந்தனத்தைக் கூறி வாழ்த்தினர்.

மார்ச்சு 14–17-இல் 'ஸைகோன்' நகரில் நடைபெற்ற 'வியட்-நாம்' ஆசிரியர் பொதுச்சங்கத்தின் மகாநாட்டுக்கு, உலக ஸம்மேளனத்-தின் பிரதிநிதியாக, கொரியா நாட்டைச் சார்ந்த 'தாய் சை சுங்' என்பவர் விஜயஞ்செய்தார்.

'பிலிப்பைன்' நாட்டு 'பப்ளிக்' ஸ்கூல் ஆசிரியர் சங்கம் (The Philippine Public School Teachers' Association) 'க்விஸான்' நகரில் கல்விவளர்ச்சி, தலைமைப்பயிற்சி இரண்டினுக்குமாக ஒரு மாளிகையைக் கட்டியிருக்கின்றது. அதன் திறப்புவிழா வருகின்ற மே மாதத்தில் நடைபெறும். அவ் விழாவுக்குப் பல நாடுகளில் உள்ள கற்றோர் வந்திருந்து சிறப்பிக்கவேண்டுமென்று அச்சங்கம்வேண்டிக்கொண்டுள்ளது. அம் மாளிகை PPSTA உத்தியோகஸ்தர்களுக்கும் அலுவலாளர்க்கும் ஓர் ஆராய்ச்சிக்கூடமாக (Workshop) அமையும். செய்திகளையும் நூல்நிலையநூல்களையும் பெறுதற்கும் அளிப்பதற்கும் ஏற்ற வசதிகள் அங்கு உண்டு. அது அந்நாட்டின் கல்வித்தலைமைக்கு ஓர் உயிர்நிலையமாக இருந்து தொண்டாற்றும். இப் புதிய தீரச்செயல் வெற்றிபெற்று நீடூழி வாழ்தல் வேண்டுமென்று, PPSTA–வின் 'ஸெக்ரடரி–ஜெனரல்'லான திரு. ரிகார்டே காஸ்ட்ரோ என்பவருக்கு, Dr. வில்லியம் G. கார் உலக ஸம்மேளனத்தின் வாழ்த்துச்செய்தியை அனுப்பியுள்ளார்.

சிங்கப்பூர் ஆசிரியர் தேசிய காங்கிரசின் தலைவரான E.W. ஜேசுதாஸன் என்பவர், சிங்கப்பூர் 'ராஃபிள்ஸ் இன்ஸ்டியூ'டின் தலைவராக (Principal) நியமிக்கப்பெற்றுள்ளார். அக் கல்விஸ்தாபனம், அந் நாட்டிலுள்ள மிக்க பழமையும் புகழும் பெற்றுள்ள ஆண்கள் ஆரம்பப்பாடசாலைகளுள் (Preparatory Schools) ஒன்று. 'ஸ்டாக்ஹோம்' நகரில் நடைபெற்ற WCOTP கூட்டத்துக்கு, அச் சங்கத்தின் பிரதிநிதியாக அவர் விஜயஞ் செய்திருந்தார்.

'கொரியா'வின் தேசீய புனருத்தாரணத்துக்காக நிறுவப்பட்ட 'சுப்ரீம் கவுன்ஸிலின்' கல்விக்கொள்கைக் கமிஷன் [Educational Policies Commission) அண்மையில் பல கூட்டங்களைத் தொடர்ந்து கூட்டிற்று. அக் கூட்டங்களுக்கு KFEA-இன் பிரதிநிதிகளாக அதன் தலைவரான Dr. சின்-ஒ-யு என்பாரும், அச்சங்கத்தின் நிர்வாகக் காரியதரிசியாகிய 'தாய் சி சுங்' என்பாரும் விஜயஞ்செய்தனர். அக் கூட்டங்களில் கொரியா நாட்டுக் கல்விவ ளர்ச்சிக்காக நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு ஸமர்ப்பிக்கப்பட்டன. அப் பிரதேசத்தில் கல்விக்கு உரிய ஸர்வசுதந்திரத்தையும் கூடிய விரைவில் மீண்டும் அளிக்கவேண்டும் என்று KFEA–இன் அப் பிரதிநிதிகள் சிபார்சுசெய்தனர்.

அரசாங்க ஊழியர் முதுமைகாரணமாக வேலையிலிருந்து விலகி ஓய்வெடுத்துக் கொள்ளுதற்கென்று வரையறுத்துள்ள காலவரம்புத்திட்டத்தை மாற்றியமைத்தல் வேண்டும்—என்று KFEA 1961-இலிருந்து அவ்வரசாங்கத்துக்கு பலமுறை எடுத்துக்கூறிவந்தது. அது இப்பொழுது அம் முயற்சியில் வெற்றிபெற்றது. மார்ச்சு மாதத்தில் வேலையிலிருந்து ஓய்வு பெறும்படி ஆசிரியர் ஐம்பதின்மர் கட்டாயப்படுத்தப்படுவர் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆயின், அச்சங்கம் செய்த முயற்சியின் முதற்பயனாக அவ் வாசிரியர்கள் விலக்கப்படவில்லை; அவர்கள் தொடர்ந்து தம் பணியைச் செய்துகொண்டுவருகின்றனர்.

அரபு நாடுகள்

'பாரிஸ் ஆபீஸ் டைரக்ட'ரான 'வில்ஹெம் எபர்ட்' என்பவர் பிப்ரவரி மாதத்தில் மொராக்கோ, டுனேஷியா, சிரியா, லெபனன்,

ஜார்டன், ஸூடான், 'யுனைடெட் ஆரப் ரிபப்ளிக்' என்னும் நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தார். 'இராக்' நாட்டில் அரசாங்கமாற்றம் ஏற்பட்ட–பின்னர், 'பாக்தாத்' நகரத்துக்கு விஜயஞ்செய்த வெளிநாட்டாருள் அவரே முதல்வர். WCOTP-க்கும் அந் நாடுகளின் ஆசிரியர் சங்கங்களுக்கும் இடையே பிற்காலத் தொடர்பினை வளர்த்தற்குரிய திட்டங்களை, அவ்வந் நாட்டு அறிஞரோடு, அவர் ஆராய்ந்தார்.

WCOTP–இன் 'அராபிக்' வெளியீடுகளின் விஸ்தரிப்புத்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அராபிக் மொழியில் அச்சிடப்பட்ட எகோவின் 13,500 பிரதிகள் ஒவ்வொரு மாதமும் அந் நாட்டில் விநியோகிக்கப்படுகின்றன.

WCOTP 'பாரீஸ் ஆபீஸின்' 'டைரக்டரான' வில்ஹெம் என்பவர், யுனைடட் ஆரப் ரிபப்ளிகின் கல்வியமைச்சரும், U.A.R ஆசிரியர் 'சின்டிகே'டின் உபதலைவருமான L. சையத் யூஸஃப் என்பவரோடு கலந்து பேசி ஆலோசித்துக்-கொண்டிருக்கிறார்.

——

World Confederation of Organizations
of the Teaching Profession
1227 16th St., N.W , Washington 6, D.C., U.S.A.

உலக ஆசிரியர் ஸம்மேளனம் (WCOTP)

1227, பதினாறுந்தெரு, N. W., வாஷிங்டன் 6, D. c., U. S. A.

'எகோ' என்னும் இப் பத்திரிகை WCOTP-ஆல் மாதந்தோறும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் என்னும் மொழிகளில்' 'வாஷிங்டன்' D.C-யிலிருந்து வெளியிடப்படுகின்றது; 'அரபி' மொழியில் 'பீரட்'டிலிருந்தும், 'ஜப்பான்' மொழியில் 'டோக்கியோ'விலிருந்தும், கொரிய மொழியில் 'சியோலி'விருந்தும், போர்ச்சுகீஸில் 'ஸா பௌலோ'விலிருந்தும், 'வியட்நாம்' மொழியில் 'ஸைகோ'விலிருந்தும் வெளியிடப்படுகின்றது. பிரத்தியேக ஆங்கிலப்பதிப்புக்கள் 'ஆக்ரா', 'நைரோபி', 'மதராஸ்' என்னும் இடங்களிலிருந்து வெளியிடப்படுகின்றன. இச் செலவில் ஒரு பகுதியை UNESCO ஸ்தாபனம் அளித்துதவுகின்றது. எகோ உறுப்புச்சங் கங்களுக்கு விநியோகப்படுத்தப்படுகின்றது. ஆயின், இதனைப் பெற விரும்புவோரும் நிலையங்களும் சந்தாவை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸர் ரோனல்ட் கௌல்ட்,	தலைவர்
S. நடராஜன்,	உபதலைவர்
வில்லியம் G. கார்,	செக்ரடரி-ஜனரல்
ஜான் M. தாம்ஸன்,	உதவி செக்ரடரி-ஜனரல்
பால்டுவின் லீ,	டைரக்டர், இன்பர்மேஷன் ஸர்விஸஸ்
பார்பரா P. ஹாஸ்கின்ஸ்,	ஆசிரியர் (Editor)

துணை ஆசிரியர்கள்:

ராபர்ட் லாப்
ஜீன் பால் ஸவரி
ஜாகலின் லாஃபலர் (வாஷிங்டன், D.C.)
அஃபிஃப் பால்பகி (பீரட்)
ஹிரோஷி யோஷிடா (டோக்கியோ)
ட்ரூட் ஹாப்ட்பான் (ஸா பௌலோ)
ட்ரான் பிச் லன் (ஸைகோன்)
S. நடராஜன் (மதராஸ்)
மியுங்—ஸூ லிம் (ஸியோல்)